සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
කාන්තා, ළමා කටයුතු සහ සමාජ ආරක්ෂණ අමාත්‍යාංශය - සමාජ ආරක්ෂණ අංශය
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - சமூகபாதுகாப்பு பிரிவு
***Ministry of Women, Child Affairs and Social Security – Social Security Division***

| | | |
|---|---|---|
| මගේ අංකය **எனது இல** My No DSD/HO/05/MF/01/சுற்றறிக்கை | ඔබේ අංකය **உமது இல** Your No ........................ | දිනය **திகதி** Date 2020/03/13 |

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சுற்றறிக்கை இலக்கம்:- 2020/**

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள்/
வங்கிச் சங்க முகாமையாளர்கள்

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மூலம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஊடாக (CBO) சமுர்த்தி பயனாளிகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்ற "சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதிகப் பற்றுக்கடன் திட்டம்"**

01. **அறிமுகம்**

இலங்கையில் குறுநிதியீட்டல் சந்தையில் இலக்கிடப்பட்ட குறைந்த வருமானம் பெறுவோரின் பொருட்டு வைப்புக்களை வகைப்படுத்துதல் (Deposit Mobilization), சிறிய கடன்களை வழங்குதல் (Micro Credit) உட்பட நிதி மற்றும் நிதியல்லாத சேவைகளை வழங்கி போட்டி நிலைகள் மற்றும் சவால்களை வெற்றி கொண்டு சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டச் செய்யும் செயற்பாட்டில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி வலையமைப்பு பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.

அவ்வாறு இருந்தும் குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் தங்களது அவசர நிதித் தேவைகள் மற்றும் ஏனைய சிறியளவிலான தொழில் முயற்சி ரீதியிலான மூலதனத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டான திடீர் கடன்களைப் பெற்றுக் கொள்ளும் போது முறையற்ற நிதிச்சந்தையானது அநியாய வட்டிக்காரர்களின் ஆக்கிரமிப்புகளுக்குள்ளகியுள்ளமை தெளிவாகின்றது.

இவ்வாறான நிலைமையானது அவர்களிடத்தேயே சமூக மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சனைகள் அதிகரிப்பதற்கும் அதன் பிரகாரம் மேலும் அவர்களது வாழ்க்கத்தரமானது கீழ் மட்டத்தில் விழவும் காரணமாகியுள்ளது.

அவர்களது சிறியளவிலான தொழில் முயற்சி மூலதனத் தேவைப்பாடுகள் உட்பட உருவாகும் பிற அவசர நிதித்தேவைகளின் பொருட்டு தேவைப்படும் குறுகிய கால நிதியியல் ரீதியிலான தேவைப்பாடுகளை தமது கிராமப் பிரதேசத்திலிருந்தே தீர்த்துக் கொள்வதற்கும், குறைந்த வருமானம் பெறுவோரை கடன் பெறும் நிலையிலிருந்து மீட்டுக் கொள்வதும் இக்கடன் வேலைத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இதன் பிரகாரம் மிகக்குறுகிய காலத்திற்குள் சலுகை ரீதியிலான வட்டி வீதம் ஒன்றின் கீழ் கடனைப் பெற்றுக் கொள்ளவும், இலகுவான திட்டமொன்றின் கீழ் கடனை மீளச் செலுத்துவதற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டும், அனைத்து சமுதாய அடிப்படை அமைப்புகளினதும் நிதிப்பலத்தினை விருத்தி செய்வதற்கும் "சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதிகப் பற்றுக் கடன் திட்டத்தினை" அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් பணிப்பாளர் தலைமையதிபதி Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී பிரதான கணக்காளர் Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) பணிப்பாளர் (குறு நிதி ) Director ( Micro Finance) | කාර්යාලය அலுவலகம் Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

அதிமேதகு ஜனாதிபதியவர்களின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் "மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தினை" அடிப்படையாகக் கொண்டு பெரும்பாக பொருளாதார இலக்கினைப் பூர்த்தி செய்து கொள்ளும் போது தனிநபர் வருமானத்தை விருத்தி செய்தல், குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத்தரத்தினைக் கட்டியெழுப்பும் பணிக்கு பங்களிப்பு செய்வதும் இக்கடன் வேலைத்திட்டத்தின் நிகழ்காலக் குறிக்கோளாகும்.

மேலும் 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைக்களின் குறிக்கோள்கள் இடத்தேயே பந்தி இலக்கம் 1(ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளில் அணி திரண்டுள்ள அங்கத்தவர்களின் குறுநிதி தேவைகள் மற்றும் முதலீட்டு ஆற்றல்களை விரிவுபடுத்துதல் என்ற குறிக்கோளை வெற்றி கொள்ளவும் இக்கடன் வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கண்டி, கம்பஹா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பொருட்டு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி 2016/13 சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சமுர்த்தி அருணலு துரித கடன் திட்டம் இதன் மூலம் செல்லுபடியற்றதாக்கப்படுவதுடன் "சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதிகப் பற்றுக் கடன் திட்டம்" அதன் பொருட்டு அறிமுகப்படுத்தப்படுகின்றது. அதற்குரிய மொத்தக் கடனை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுவதுடன் சமுதாய அடிப்படை அமைப்பின் ஊடாக கடனை வழங்கும் செயற்பாடுகள் தொடர்பில் முறைப்படியான சுற்றறிக்கை ஒன்று சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் மூலம் வெளியிடப்படும்.

## 2. கடனை வழங்கும் முறை

நாடு பூராகவும் விரிவாக்கம் அடைந்துள்ள 1073 சமுதாய அடிப்படை வங்கி வலையமைப்பினால் செயற்பாடுள்ள சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளின் (CBO) பங்கேற்புடன் "சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதிகப் பற்றுக் கடன் திட்டத்தினை" செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியால் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கு மொத்தமாக கடன் தொகையொன்று (Bulk loans) வழங்கப்படுவதுடன், அந்த சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினால் அங்கத்தவர்களுக்கு கடனை வழங்கி முறையான பிரகாரம் மீள அறவிட்டுக் கொள்ள வேண்டியுள்ளதுடன், சமுதாய அடிப்படை அமைப்பினால் பெற்றுக் கொண்ட கடன் தொகையினை ஒப்பந்தம் செய்து கொண்ட பிரகாரம் மீளச் செலுத்தவும் வேண்டும்.

## 3. சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கு வழங்கப்படுகின்ற கடன் தொகை எல்லை.

3.1 இக்கடன் திட்டத்தின் கீழ் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியால் சமுதாய அடிப்படை அமைப்புக்கு வழங்கப்படுகின்ற உச்ச பட்ச கடன் தொகையானது ரூபா. 300,000/- ஆகும். அவ்வாறு இருந்தாலும் ஆரம்ப கட்ட கடன் முற்பணத் தொகையானது ரூபா. 50,000/- ஐத் தாண்டலாகாது. மேலும் வழங்கப்படுகின்ற முற்பணத் தொகையிலிருந்து 25%த்துக்கு இணையான தொகையினை குறித்த சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவரால்லாதோர் வைப்புக் கணக்கில் வைத்துக் கொள்ளல் வேண்டும். இக்கடன் வேலைத்திட்டத்தின் செயற்பாட்டினது முன்னேற்றத்தின் பிரகாரம் கட்டுப்பாட்டுச் சபை விளக்க அங்கீகாரத்தின் மூலம்

கடன் முற்பணத் தொகையினை அதிகரித்துக் கொள்ள முடியும். சகல கடன் முற்பணங்களை வழங்கும் அங்கீகாரம் கட்டுப்பாட்டு சபையின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.2 முதன் முதலாக கடன் தொகையினை வழங்கும் போது ரூபா. 300,000/- இற்கான உச்சபட்ச கடன் தொகையின் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக்கும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டியதுடன் சமுதாய அடிப்படைவ ங்கியின் சார்பில் வங்கி முகாமையாளருக்கும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் சார்பில் அதன் தலைவர், செயலாளர் மற்றும் பொருலாளர் கையொப்பமிடல் வேண்டும்.

3.3 ஆரம்ப கட்ட கடன் தொகையான ரூபா. 50,000/- ஐத் தாண்டாத தொகையொன்றினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் விண்ணப்பதாரிகளின் கடன் கோரிக்கைகளை சமுதாய அடிப்படை அமைப்புளின் நிதியங்களது ஆற்றல்கள் தொடர்பில் முகாமையாளர்களால் கட்டுப்பாட்டுச் சபைக்கு குறித்த சிபார்சுகளை வழங்கியவுடன் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் அந்த சமுதாய அடிப்படை அமைப்புக்கு மேலும் கிடைக்க வேண்டிய கடன் தொகையான ரூபா. 300,000/- தைத் தாண்டாத பிரகாரம் அடிக்கடி கடன் முற்பணமாக (பகுதி பகுதியாக) கடனை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இக்கடன் முற்பணத்தினை வழங்கும் போது கடனுக்கான தகுதிகள் மற்றும் முன்னர் பெற்றுக் கொண்ட கடனின் பொருட்டுவட்டியினை செலுத்துவது தொடர்பில் திருப்திப்படல் வேண்டும்.

## 4. வட்டி வீதம்

4.1 வருடாந்த வட்டி வீதமானது 10%மாகும். மாதம் ஒன்றுக்கு 0.83%த்தினை அறவிடல் வேண்டும். அதாவது ரூபா. 100/- க்கு 0.83%சதமாகும். ஒவ்வொரு மாதமும் வட்டித் தொகை செலுத்துவது கட்டாயமானதாகும். அத்துடன் பணியாற்றும் மாதத்தின் இறுதித்திகதியில் வட்டியினைச் செலுத்துவதற்கு சமுதாய அடிப்படை அமைப்பு ஒப்பந்தத்தில் கட்டுப்படுகின்றது.

4.2 சமுர்த்தி வங்கியானது ஒவ்வொரு நாளும் இணைப்பு 05இன் படிவத்துக்கு அமைய கடன் அட்டையினை பயன்படுத்தி கடனாளியின் (CBO) கடன் மீதியினை குறிப்பிடல் வேண்டும். அதன் பின்னர் மாதத்தின் இறுதியில் கடன்களின் கூட்டுத் தொகையினைக் கண்டுபிடித்தல் வேண்டும். அக்கடன் மேலதிகப்பற்றுக்களின் கூட்டுத்தொகையினைப் பெற்றுக் கொண்டு (திரட்டிய) மாதத்திற்குரிய வட்டியினைக் கணக்கிடல் வேண்டும்.

உதாரணம்:-

றங்கிறிகந்தை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு, சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதிகப் பற்றுக் கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொண்ட கடன் முற்பணங்களின் நவம்பர் 30ஆம் திகதியிற்குரிய நிலுவைகள் இணைப்பு 06இன் மூலம் காட்டப்பட்டுள்ளது. நவம்பர் 30ஆம் திகதியில் திரட்டிய கடன்களின் கூட்டுத் தொகையானது ரூபா. 4,627,500/- ஆகும் அத்திரட்டிய நிலுவைக்குரிய வட்டியினைக் கணக்கிடுவது கீழுள்ள பிரகாரமாகும்.

$$= \frac{4627500 \times 10 \times 1}{100 \times 365}$$

= ரூபா. 1267.81

4.3 வட்டி அறவிட வேண்டியது அந்தந்த சமுதாய அடிப்படை அமைப்பின் மாதத்திற்குள் மேலதிகப்பற்றாகியுள்ள நிலுவைக்கு ஏற்பவாகும்.

அறவிடப்படுகின்ற வட்டிக்கான கணக்கு பதிவுகளாவன

காசுக்கணக்கு / அங்கத்தவரால்லதோர் வைப்புக்கணக்கு - பற்று

கிடைத்த வட்டி - வழங்கிய கடன் கணக்கு - வரவு

4.4 கடன் முற்பணக்கணக்குகளை முழுமையாகவோ அல்லது பகுதியொன்றாகவோ தீர்க்கும் சந்தர்ப்பத்தில்

காசுக்கணக்கு / அங்கத்தவரால்லதோர் வைப்புக்கணக்கு - பற்று

கிடைத்த வேண்டிய சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல்

மேலதிகப் பற்றுக்கடன் கணக்கு - வரவு

4.5 அறவிடமுடியாக்கடன் கணக்கு ஒன்று அறிமுகப்படுத்தப்பட மாட்டாது என்பதுடன் தொடர்ச்சியாக 03 மாதங்கள் வட்டித் தொகையினை செலுத்தாதவிடத்து அங்கத்தவரல்லாதோர் சேமிப்புக் கணக்கிலிருந்து கடன் முற்பணத் தொகையினையும், வட்டித் தொகையினையும் அறவிட்டுக் கொள்ளல் வேண்டும். ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சமுதாய அடிப்படை அமைப்பினால் செலுத்த வேண்டிய வட்டித் தொகையினை செலுத்துவதற்கு ஒரு காலப்பகுதியினை எழுத்து மூலம் கோருகின்ற சந்தர்ப்பத்தில் அதன் பொருட்டு 2மாதங்களைத் தாண்டாத நிவாரணம் ஒன்றினை வழங்க முடியும். அச்சந்தா்ப்பத்தில் சகல நிலுவைக்கடன் வட்டியினை ஒரே தடவையில் செலுத்துதல் வேண்டும்.

## 5. கடன் முற்பணத்தொகையினை மீளச் செலுத்தும் காலம்

5.1 சமுதாய அடிப்படை அமைப்புக்கு தேவையான எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கடன் தொகையினைச் செலுத்தி கடன் தொகையிலிருந்து விலக முடியும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் குறித்த வட்டித் தொகையினையும் செலுத்துதல் வேண்டும்.

5.2 மாதாந்த தவணையாக கடன் தொகையினை செலுத்துவது அவசியமானதொன்று என்பதுடன் சமுதாய அடிப்படை அமைப்பிற்கு முடியுமான சந்தர்ப்பத்தில் கடனை பகுதி பகுதியாக செலுத்துவதற்கு வாய்பளிக்கப்படுகின்றது. இருப்பினும் வட்டித் தொகையினை செலுத்துதல் மற்றும் அங்கத்தவர்களுக்கு கடனை வழங்குதல் மற்றும் மீள அறவிட்டுக்கொள்ளல் போன்ற விடயங்கள் திருப்திகரமற்றதாயின் கடன் முற்பண நிலுவையினை ஒரே தடவையில் அறவிட்டு கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

## 6. பிணைகள்

6.1 சமுதாய அடிப்படை அமைப்பினால் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் பராமரிக்கப்படுகின்ற சமுதாய அடிப்படை அமைப்பின் பெயரில் உள்ள அங்கத்தவரல்லதோர் சேமிப்புக் கணக்கின் வைப்புத் தொகையிலிருந்து 25%த்தினை பிணையாகக் கொண்டு கடன் தொகையினை விடுவித்தல் வேண்டும். அதாவது குறித்த சமுதாய அடிப்படை அமைப்பு கடனைக் கோரும் தினத்தில் கணக்கில் உள்ள வைப்பு மீதியானது 25%த்திற்கு இணையான தொகையொன்றினை கணக்கில் வைத்துக் கொள்ளல் வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் கிடைக்க வேண்டிய கடன் தொகையானது ரூபா. 300,000/- த்தை தாண்டலாகாது.

6.2 சமுதாய அடிப்படை அமைப்புக்குச் சொந்தமான அங்கத்தவரல்லாதோர் சேமிப்புக் கணக்கின் வைப்பு தொகையினை பிணையாக வைத்து கடன் தொகை விடுவிக்கப்படுவதனால், கடனை மீளச் செலுத்துதல் மற்றும் அதன் பொருட்டு மேற்கொள்கின்ற அர்ப்பணிப்பின் அடிப்படையில் கிடைக்க வேண்டிய கடன் தொகைக்கு இணையாக 25%த்தினை வைப்புக்கணக்கில் வைத்துக் கொண்டு மிகையான தொகையினை சங்கத்தின் கோரிக்கையின் பிரகாரம்விடுவிக்கும் போது சமுதாய அடிப்படை அமைப்பின் பொருட்டு நிதியங்களை விடுவிக்கும் சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு ஏற்றதாக முகாமையாளரால் குறித்த பிரிவுகளிலிருந்து அனுமதியினைப் பெற்றுக் கொண்டு வைப்புக்களை மீள வழங்குதல் வேண்டும்.

6.3 சமுதாய அடிப்படை அமைப்பிற்கு கடனை வழங்குவதற்கு முன்னர் தனது அமைப்புக்கு சொந்தமான அதிகாரப் பிரதேசத்தின் பிரதேச அமைப்பின் சிபார்சினை பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும் என்பதுடன் ஏதேனும் கடன் தொகையினை செலுத்தாதுள்ள சந்தர்ப்பத்தில் அக்கடன் தொகையினை மீளச் செலுத்த குறித்த பிரதேச அமைப்பு பொறுப்புடன் கட்டுப்படுகின்றது.

**7 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மொத்தமான கடனை (Bulk Loan) வழங்கும் போது ஆராய்ந்து பார்க்க வேண்டிய பிற விடயங்கள்.**

7.1 சமுதாய அடிப்படை அமைப்பின் அமைப்பு விதியின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை.

7.2 வருடாந்த பொதுக்கூட்டத்தினை அமைப்பு விதியின் பிரகாரம் நடாத்துதல், உத்தியோகத்தர் குழாமை நியமித்தல், அறிக்கைகளை பராமரிக்கின்றமை உரிய பிரகாரம் நடைபெறுதல்.

7.3 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் மூலம் வழங்கப்படும் கடன் தொகையானது அங்கத்தவர்களுக்கு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வசதிகளை வழங்குவதே தவிர பிற பணியொன்றுக்கோ அல்லது சொத்துக்களை வாங்கவோ பயன்படுத்துவதில்லை என்ற உறுதிப்பாடு ஒன்றிருத்தல்.

7.4 குறித்த சமுதாய அடிப்படை அமைப்பு இக்கடன் வேலைத்திட்டத்தில் தற்போது பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகைக்கு ஏற்றதாக சேர்க்கக்கூடிய ஒரு தொகையினை ஒவ்வொரு மாதத்தினதும் கடைசித்திகதிக்கு முன்னர் சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவரல்லாதோர் கணக்கில் வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அதன் பொருட்டு கடனை படிப்படியாக மீள அறவிட்டுக்கெள்ளல் உட்பட சமுதாய அடிப்படை அமைப்பின் சங்க நிதியத்தை மிகைப்படுத்தக்கொள்ள பல்வேறு வருமானமீட்டல் வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

7.5 சமுதாய அடிப்படை அமைப்பினால் இக்கடன் வேலைத்திட்டத்தின் கீழ் கடனை விண்ணப்பித்து பெற்றுக்கொள்வதற்காக சபைக்கூட்டத்தில் பிரேரணை ஒன்றினை நிறைவேற்றி அங்கீகாரத்தினை பெற்றிருத்தல் வேண்டும். இந்த ஒழுங்கானது உச்சபட்ச கடன் தொகையினைப் பெறுவதற்காக அங்கீகாரம் பெற்றிருப்பது போதுமானதாகும். மேலும் சமுதாய அடிப்படை அமைப்பின் பொருட்டு கடனைப்பெறும் அதிகாரம் சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரைக் கொண்ட குழுவினருக்கு ஒப்படைத்திருத்தல் வேண்டும்.

7.6 பெற்றுக்கொள்ளப்படும் சகல மொத்தமான கடனின் பொருட்டு சமுதாய அடிப்படை அமைப்பின் உத்தியோகத்தர் குழாம் (தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர்) தனித்தனியாகவும்,

கூட்டாகவும் பிணையாக இருக்க வேண்டியதுடன், ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அமைப்பு விதிக்கேற்ப புதிய உத்தியோகத்தர் குழாம் நியமிக்கப்பட்டால் சகல கடன் பொறுப்புக்களும் அந்த உத்தியோகத்தர் குழாமுக்கே பொறுப்புடையதாக அமையும்.

7.7 சமுதாய அடிப்படை அமைப்பினால் இச் சுற்றறிக்கை ஆலோசனைக்கேற்றதாக கடன் வழங்கும் பணிகளுக்கான முறையொன்றினை தயாரித்து அங்கத்தவர்களிடம் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதன் பொருட்டான மாதிரி வழிகாட்டல் ஒன்று சமுதாய அடிப்படை அமைப்பு பிரிவின் மூலம் வெளியிடப்படும்.

7.8 குறித்த சமுதாய அடிப்படை அமைப்பினால் கடனைக் கோரும் போது விண்ணப்பிக்கின்ற கடன் தொகை, கையிருப்பிலுள்ள தொகை, கடன் தேவைப்பாடுகள் தொடர்பில் வங்கி முகாமையாளர் கூடிய கவனத்தினைச் செலுத்தவும், அது தொடர்பாக அமைப்பின் உத்தியோகத்தர் குழாமை விளக்கமளிக்கவும் வேண்டும். அத்துடன் மேலும் கடனை வழங்குவதற்கு போதுமானளவு தொகை சமுதாய அடிப்படை அமைப்பிடம் இல்லாவிடின் (அங்கத்தவரல்லாதோர் கணக்கில் அறிக்கைகளை பரீட்சிப்பதன் ஊடாக) மாத்திரம் புதிதாக கடன் முற்பணம் ஒன்றினை வழங்குதல் வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளதாவிடத்து சமுதாய அடிப்படை அமைப்பிற்கு வருமானம் ஒன்று இல்லாமல் கடன் வட்டியாக கூடிய தொகையினை செலுத்துவதன் காரணமாக நிதியியல் ரீதியான சிக்கலோ அல்லது இழப்போ ஏற்படுவதானது இக்கடன் வேலைத்திட்டத்தின் எதிர்பார்ப்புக்களை தவிடு பொடியாக்குவதற்கு காரணமாக அமையும் என்பதனை ஞாபகமூட்டுகின்றேன்.

7.9 வங்கி முகாமைாளரால் இக் கடன் வேலைத்திட்டத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வது விசேடமான ஒரே வகையான ஆட்களா என்பதுடன் குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு கூடிய கவனம் செலுத்தப்படமாட்டாது. எனவும் திணைக்களத்தின் குறிக்கோள்களுக்கு ஏற்றதாக செயற்படுகின்றதா என ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

7.10 சமுதாய அடிப்படை அமைப்பின் கடன் ஆபத்தினை குறைத்துக்கொள்ளும் பொருட்டு கடன் காப்பீட்டுப் பாதுகாப்புச் செயற்பாடுகள் தொடர்பில் எதிர்காலத்தில் விளக்கமளிக்கப்படும்.

## 8 மொத்தமாக கடன் தொகையொன்றினைக் கோரும் போது சமுதாய அடிப்படை அமைப்பு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்.

I. மொத்தமான கடன் விண்ணப்பப்படிவம் (இணைப்பு 01)
II. கடன் ஒப்பந்தம் (இணைப்பு 02)
III. பிணையாளிகளின் கூற்று (இணைப்பு 03)
IV. கோரும் இடத்து அறவிடக்கூடிய உறுதிப்பாட்டுச்சான்றிழ் (இணைப்பு 04)
V. கடன் கோரிக்கைப் பிரேரணையின் பொருட்டு அங்கீகாரம் கிடைத்த கூட்ட அறிக்கை (தலைவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)
VI. கடனை வழங்கும் பணிமுறைக் கோவையின் பிரதியொன்று (முதற்தடவையாக கடன் தொகையினைக் கோரும் போது மாத்திரம்)

## 9 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு

### கடனை அங்கீகரித்தல், மற்றும் விடுவித்தல், கணக்குப் பதிதல்

9.1 சமுதாய அடிப்படை அமைப்புக்குப் பொறுப்பாக பணியிலீடுபடும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபார்சு மற்றும் வங்கி முகாமையாளரின் சிபார்சுகள் உள்ளடங்கிய கடன் விண்ணப்பப்படிவத்தை கட்டுப்பாட்டுச்சபைக்கு சமர்ப்பித்தல்.

9.2 கட்டுப்பாட்டு சபையின் முன் அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஒப்பந்தங்களை செய்து (இணைப்பு 02) கடன் தொகையினை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். முதலில் பெற்றுக் கொள்ளும் கடன் தொகைக்கு மாத்திரம் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதுடன் அதன் பின்னர் பெற்றுக்கொள்ளும் கடன் முற்பணத்தின் பொருட்டு செய்து கொண்ட ஒப்பந்தம் தொடர்ந்தும் செல்லுபடியாகும். இருப்பினும் பின்னர் விண்ணப்பிக்கின்ற கடன் முற்பணத்தின் பொருட்டு கட்டுப்பாட்டுச்சபை விளக்க அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

9.3 கடன் திட்டத்தினை செயற்படுத்தும் போது பொதுப்பேரேட்டில் பராமரிக்கப்பட்டு வருகின்ற கிடைக்க வேண்டிய கடன் கணக்கில் பொதுப்பேரேட்டு குறியீட்டு இலக்கம் மாற்றமடையாது என்பதுடன் கணக்கின் பெயர் மாத்திரம் கீழுள்ள பிரகாரம் மாற்றம் செய்யப்படல் வேண்டும்.

கிடைக்க வேண்டிய - சமுர்த்தி அருணலு கடன் கணக்கு,

- கிடைக்க வேண்டிய சமுர்த்தி அருணலு மீள் நிதியீட்டல் மேலதீகப்பற்றுக் கடன் கணக்கு என மாற்றப்படல் வேண்டும்.

9.4 கடன் தகவல் பதிவேடு ஒன்றினை பராமரிக்க வேண்டியதுடன் கீழுள்ள பிரகாரம் கணக்குப்பதிவினை பதிந்து கடன் தொகையினை விடுவித்தல்.

**பற்று – கிடைக்க வேண்டிய சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதிகப்பற்றுக்கடன் கணக்கு (குறியீட்டு இலக்கம் 3120)**

**வரவு – அங்க்த்தவரல்லாதோர் கணக்கு**

9.5 கடனை விடுவித்ததன் பின்னர் கடன் பேரேடு, ஆள்சார் கடன் பேரேடுகளில் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

9.6 செலுத்தாமல் உள்ள கடன் தொடர்பில் இச் சுற்றறிக்கை நெறிப்படுத்தல் ஆலோசனையின் பிரகாரம் அறிவிப்புக்களை மேற்கொள்ளல், வைப்புக்களிலிருந்து ஈடுசெய்தல், பதிவேடுகளில் பதிதல் என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும்.

9.7 ஏதேனும் ஒரு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு பணத்தை செலுத்தாமலிருத்தல் அல்லது காலம் தாழ்த்துகின்ற சந்தர்ப்பத்தில் மேலும் கடனை வழங்குவது, இடைநிறுத்துவது அல்லது மட்டுப்படுத்துவது முகாமையாளர் மற்றும் கட்டுப்பாட்டுச்சபையின் பொறுப்பாகும்.

**10** சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதிககடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் தொகையின் பொருட்டு கடன் காப்பீடு மற்றும் கூட்டுக்காப்பீட்டு செல்லுபடியற்றதாகும். கடன் திட்டத்தினை செயற்படுத்தும் போது அது தொடர்பான நடைமுறை நிலையினை ஆராய்ந்து பார்த்து காப்பீட்டுப் பாதுகாப்புக்கள் தொடர்பில் ஆலோசணைகள் வெளியிடப்படும்.

**11** சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளரால் சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதிக பற்று கடன் வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல் புத்தக ஆவணங்களை பராமரித்தல் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை பதிவது தொடர்பில் முறைப்படியான பயிற்சி ஒன்று சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பிற்கும் வழங்குதல் வேண்டும் . அதற்கான செலவுகளை ஈடுசெய்யும் முகமாக ரூபா 5000/-தைத் தாண்டாத தெகையினை செலவிடமுடியும்.

**12** சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளரால் அல்லது அதிகாரமளிக்கப்படுகின்ற வங்கி / வலய உத்தியோகத்தர் ஒருவர் ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை

அமைப்பினதும் கடன் வேலைத்திட்டம் தொடர்பில் பின் பணி ஆய்வொன்றினை மேற்கொண்டு தேவைப்படுமிடத்து வழிகாட்டல்களையும் / ஆலோசனைகளையும் வழங்குதல் வேண்டும்.

**13** சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச்சங்க முகாமையாளர்கள் உட்பட பணியாளர்கள் சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதீகப்பற்று கடன் வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆலோசணைகளின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ள குளிக்கோள்களை அடையக்கூடிய பிரகாரம் கடன் வேலைத்திட்டங்கள் செயற்படுவது தொடர்பில் பின் பணி ஆய்வொன்றினை மேற்கொள்ளுதல் வேண்டும். தேவைப்படுமிடத்து வழிகாட்டல்கள் / சுற்றறிக்கைகளுக்கேற்றதாக கட்டளைகளை பிறப்பிக்கவும் முழு அதிகாரம் கிடைக்கப் பெறுகின்றது.

**14** சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியால் ஒவ்வொரு மாத இறுதியிலும் சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதிகப் பற்று கடன் வேலைத்திட்டம் தொடர்பான (சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புடன் செயற்படும்) முன்னேற்றத்தினை ஏனைய கடன் முன்னேற்றங்களை அறிக்கையிடும் படிவத்திற்கமைய குறுநிதி பிரிவின் முகாமைத்துவ தகவல் பிரிவுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**15** மேலே 03 மற்றும் 09ம் பந்திகளின் கீழ் இங்கு சொல்லப்பட்ட கடன் திட்டத்தில் பிணைகள், கடனை அங்கீகரித்தல் மற்றும் கடனை வழங்குவது தொடர்பில் ஆலோசணைகள் வழங்கப்பட்டிருந்தாலும் நாட்டிற்குள் உருவாகியுள்ள அவசர தேவைகளைக் கவனத்தில் கொண்டு முகாமையாளர் தனது சமுதாய அடிப்படை அமைப்பு வாடிக்கையாளர்கள் தொடர்பில் கட்டிபெழுப்பியுள்ள கொடுக்கல் வாங்கல் தொடர்பான நம்பிக்கை தொடர்பில் முன்னைய அனுபவங்களையும் ஆராய்ந்து பார்த்து இச் சந்தர்ப்பத்தில் உள்ள கடன் கோரிக்கைகளை பூர்த்தி செய்து கொடுக்க முயற்சித்தல் வேண்டும். இந்த சவாலிற்கு முன்னால் எமது வறிய மக்களை பட்டினியிலிருந்து மீட்டெடுப்பது எமது தேசிய பொறுப்பொன்றாகும் என்பதனையும் சொல்லி வைப்போம். அதில் உண்மைக்கும் நேர்மைக்கும் தலை வணங்குமாறு தங்களது வாடிக்கையாளர்களை விளக்கமளித்தல் வேண்டும்.

ஆர்.பி.பீ. திலக்கசிரி,

பணிப்பாளர் தலைமையதிபதி,

Translated by:- M.M.M.Jawhar (Translator)

**பிரதிகள்**

1. செயலாளர், மகளிர்,சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. செயலாளர், சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
3. சக மாவட்டச் செயலாளர்கள் / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள் மாவட்ட செயலகம் - த.கூ.க.பொருட்டு
4. மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், - த.கூ.க.பொருட்டு
5. சகல மாவட்ட சமுர்த்திப்பணிப்பாளர்கள், மாவட்டச் செயலகம் - த.கூ.க.பொருட்டும், உ.ந.பொருட்டும்
6. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
7. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
8. சகல பணிப்பாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
9. சகல பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலகம் - த.கூ.க.பொருட்டு
10. சகல தலைவர்கள், நிறைவேற்றுக்குழு, சமுதாய அடிப்படை வங்கிச்சங்கம் - த.கூ.க.பொருட்டும் உ.த.பொருட்டும்
11. சகல தலைவர்கள் , கட்டுப்பாட்டுச்சபை, சமுதாய அடிப்படை வங்கி - த.கூ.க.பொருட்டும் உ.த.பொருட்டும்